# புனித அந்தோனியார் கல்லூரி
## ஊர்காவற்றுறை

# பரிசளிப்பு விழா

## 13.07.20~~09~~10

**செவ்வாய்க்கிழமை, காலை 09.30மணி**

பிரதம விருந்தினர்

**திரு. ம. ஜோசவ் மனோகரன்**

தலைவர், பழைய மாணவர் சங்கம், ஐரோப்பிய யூனியன் கிளை

**தலைவர்**

**அருள்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர்**

அதிபர்

## நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினரை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரல்
- பாடசாலைக் கொடி ஏற்றுதலும் கீதம் இசைத்தலும்
- மங்கள விளக்கேற்றுதல்
- இறைவணக்கம்
- வரவேற்புப்பாடல்
- வரவேற்புரை – செல்வன். அ.வே.பபில்ராஜ்
- அதிபர் அறிக்கை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- English Drama – "The Mercy of God"
- தமிழ் நாடகம் "அரிச்சந்திர மயான காண்டம்"
- நன்றியுரை – திருமதி.அ.சிவாஸ்கரன்
- தமிழ்த் தாய் வாழ்த்து

## இறைவணக்கம்

இறைவணக்கம் இனிதாய்ப்பாடி
இறைவா உம்பெயர் புகழ்கின்றோம்
சங்கமமாகி சபைதனில்வாரும்
சரணம் சரணம் இறைவனே (2)

உலகாழும் இறைவா உறவாடவருவாய் - எம்
உணர்வோடு இன்றும் அவைதனில் அமர்வாய்
சக்தியும் நீயே
சாந்தியும் நீயே 2
சரணம் சரணம் திருவடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

காக காக பகரிக ரிக ரிரிஸா
ரீரிரீரி கரிஸக ரிஸ கரிஸா
ஸஸாஸ ககாக மமாம பபாப
ஸாஸ ரீரி கரிஸா ஸரிகரிஸ

இருளினை அகற்றி ஒளியினை ஏற்ற - எம்
இதயத்திற் கென்றும் மெஞ்ஞானம் தருவாய்
வழியும் நீயே
வாழ்வும் நீயே 2
சரணம் சரணம் உனதடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

## வரவேற்புப்பாடல்

இராகம் : ஹிந்தோளம்

அந்தோனி குடும்பத்தின் பரிசில் நாளாம்
சிறப்போடு நாமெல்லாம் மகிழும் திருநாளாம்

லண்டன் மாநகரில் கணக்கியல் நிபுணராய்
நல் வாழ்வு காணும் யோசப் மனோகரனே!

எமதரும் கலைக்கூட முன்னைநாள் மைந்தனே
பழம் பெரும் புகழ் கொண்ட கரம்பனூர் கலைஞனே!
அந்தோனி மைந்தரின் ஐரோப்பியக் கிளையின்
அரும்பெரும் தலைவரே வருக வருகவே!

அந்தோனி குடும்பத்து அருட்பணி ஆயனே
ஜேம்ஸ் எனும் ராஜனே இனிய முதல்வனே
கல்வி கலையோடு ஆன்மீக அமுதத்தை
அள்ளி வழங்கிடும் வள்ளலே வருகவே!

சேவையில் உயர்ந்த ஏணியே, தோணியே!
கல்விப் பாதையினை காட்டிடும் ஆசான்களே!
பல நலம் பெற்று நீர் பாங்காய் வாழ்ந்திட
அந்தோனி பாதங்களில் படைக்கின்றோம் வருகவே!

கல்வி அதிகாரிகளே, அதிபரே, பெற்றோரே!
பழைய மாணவரே பண்புசால் பெரியோரே
நல்வரவு சொல்லி நமஸ்காரம் செய்தே
வருக வருகவென வாழ்த்துகின்றோமே.

## 2009ம் ஆண்டிற்கான அதிபரின் அறிக்கை

எமது கல்லூரியின் 2009ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவினை சிறப்பிக்க, பிரதம விருந்தினராக வருகைதந்துள்ள எமது கல்லூரியின் பழைய மாணவரும், மண்ணின் மைந்தனும், எமது கல்லூரியின் வளர்ச்சியில் காத்திரமான பங்காளியாகத் திகழும் பழைய மாணவர் சங்க ஐரோப்பிய யூனியன் கிளையின் தலைவருமாகிய உயர்திரு. ம. ஜோசவ் மனோகரன் அவர்களே,
எமது வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே,
ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே,
உதவிக் கல்விப் பணிப்பாளர்களே,
ஆசிரிய ஆலோசகர்களே,
உதவி அரசாங்க அதிபர் அவர்களே,
அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே,
அயற்பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே,
பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே,
எமது பிரதேசத்திலுள்ள நிறுவனங்களின் தலைவர்களே,
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே,
பெற்றோர்களே, நலன் விரும்பிகளே,
எனது அன்பான ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர்களே,
அன்புநிறை மாணவச் செல்வங்களே,
உங்கள் அனைவருக்கும் இனிய வணக்கம் கூறி, அன்புடன் வரவேற்கின்றேன். தீவகத்தின் பெருமையாகத் திகழும் இக்கல்விக் கூடத்தின் அதிபராக முதலாவது அகவையை நிறைவு செய்து, அக்காலத்திற்குரிய அதிபர் அறிக்கையினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசல்களை வழங்கிப் பாராட்ட இங்கு வருகை தந்திருக்கும், எமது மண்ணின் மைந்தனும், இக்கல்லூயில் முன்னேற்றத்திற்காக ஆவலுடன் உதவிவருபவருமான இன்றைய பரிசளிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினர், மதிப்புக்குரிய திரு. ம. ஜோசவ் மனோகரன் அவர்களே! ஐரோப்பிய யூனியனில் இயங்கும் பழைய மாணவர் சங்க கிளையின் தலைமைப் பொறுப்பை கடந்த இரண்டு வருடங்களாக வகித்துவரும் தாங்கள், எமது கல்லூரியின் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் மட்டுமல்லாது அவர்களின் சமூக மேம்பாட்டிற்காவும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு, பல உதவிகளை பெற்றுத்தர நன்முயற்சிகள் மேற் கொண்டுள்ள இவ்வேளையில், எம்முடன்

இன்று பிரசன்னமாகி இருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

கரம்பொன் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள், சிறிய புஸ்ப ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், எமது கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர்தர கல்வியையும் பெற்றிருந்தீர்கள். யாழ்ப்பாணம் சம்பந்திரிசியார் கல்லூரியிலும் வேலனை மத்திய கல்லூரியிலும் சிறிது காலம் கற்றிருந்தீர்கள். கணக்கியல் துறையில் ஆர்வம் கொண்ட தாங்கள் கொழும்பில் கணக்கியல் பாடத்துறையில் மேலும் கல்விபயின்று வீரகேசரிப் பத்திரிகை வெளியீட்டாளர் நிறுவனத்தில் இளம் கணக்காளராகப் பணியாற்றி வரும் வேளையில், அத்துறையில் மேற்கல்வியைத் தொடர்வதற்காக லண்டன் சென்றீர்கள். அங்கு குறுகிய காலத்திலேயே பட்டையக் கணக்காளராக தகுதி பெற்று பல ஐரோப்பிய நாடுகளில் கிளை நிறுவனங்களைக் கொண்ட NAD Electronics போன்ற பிரபலமான நிறுவனங்களில் நிதித் துறை இயக்குனராக, முகாமைத்துவ இயக்குனராக பணியாற்றியிருந்தீர்கள்.

1994ல் மூன்று ஆங்கிலேயப் பங்காளிகளுடன் தாங்கள் ஆரம்பித்த மென்பொருள் நிறுவனம், லண்டன் பங்குச் சந்தையில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டதுடன் இலங்கையரை முகாமைத்துவ இயக்குனராகக் கொண்ட ஒரு சில நிறுவனங்களுள் ஒன்றாகப் பெருமை பெற்றது. வியாபாரத் துறையில் ஓய்வு பெற்ற பின் அன்பான மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் லண்டனில் வசித்த வரும் தாங்கள் சில வியாபார நிறுவனங்களில் ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றீர்கள்.

தமிழ் மீதும் கலை மீதும் தங்களுக்கு உள்ள ஈடுபாடு எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் தமிழின் பெருமையை எடுத்துக் கூற, பல நாடகங்களை எழுதி நடித்தமையும், லண்டனில் இயங்கும் தமிழ் கலாமன்றத்தின் நீண்ட நாள் உறுப்பினராகவும், தலைவராகவும் செயற்பட்டமையும் இதற்கு சான்றாக அமைகின்றன. அத்தோடு கடந்த இரண்டு ஆண்டுகளாக எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஐரோப்பிய யூனியன் கிளையின் தலைவராகச் செயற்பட்டு வருவதை, ஓர் வரப்பிரசாதகமாகவே கருதுகின்றோம். இவ்வருடம் எமது கல்லூரியின் தேவைகளைக் கரிசனையுடன் கேட்டு தங்களது சங்கத்தின் ஊடாக செய்துள்ள உதவிகளிற்கும், செய்யவிருக்கின்ற உதவிகளிற்கும், அவற்றைப் பெற தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவற்றையும் இவ்வேளையில் மனமாரப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். ‘ஒரு பிள்ளைக்கு ஒரு குடும்பம்’ போன்ற திட்டங்கள், மற்றும் தங்களது சொந்த

முயற்சியினாலும் செல்வாக்கினாலும் விடுதி மாணவர்களிற்கான உதவிகளைப் பெற்றுத் தருவதாக இருந்தாலும் சரி அல்லது தங்கள் சங்கத்தினூடான பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கான உதவியானாலும் சரி, தங்களது தராதரத்திலுள்ளவர்களாலேயே இவைகள் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை. இத்தருணத்திலே தங்களிற்கும், சங்கத்தின் பொருளாளர் திரு க. அரியரெட்ணம், செயலாளர் திரு. ஜெ. திமதி மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர் மாற்றம்

10.02.2009ம் திகதி நான் அதிபர் பொறுப்பை ஏற்கும் வரை அருட்திரு. ஜே. ஏ. ஜேசுதாஸ் அவர்கள் அதிபராக கடமையாற்றியிருந்தார். 1997.03.03ம் திகதி இக்கல்லூரியின் இணைந்து கொண்ட அவர் முதலில் பிரதி அதிபராகவும் பின் 01.04.2000ம் திகதி முதல் அதிபராகவும் சேவையாற்றியிருந்தார். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக குருக்களினால் வழிநடத்தப்பட்ட இக்கல்லூரி, 25 ஆண்டு கால இடைவெளியின் பின் மீண்டும் குருக்களின் நிர்வாகத்திற்குற்பட்டது என்பது இங்கு நினைவு கூரத்தக்க விடயமாகும்.

அருட்திரு ஜே.ஏ. ஜேசுதாஸ் அவர்களின் காலத்தில் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. நாட்டின் தலைசிறந்த பல பிரசைகளை உருவாக்கிய இக்கல்லூரி, யுத்தம், இடம்பெயர்வு போன்ற செயற்கை அனர்த்தங்களால் அல்லலுற்று மீள குடியமர்ந்த வேளை, அதனை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவர அடிகளார் கடுமையாக உழைத்து, அதில் வெற்றியும் கண்டார். அடிகளார் ஜே.ஏ. ஜேசுதாஸ் அவர்கள் சிதைந்து கிடந்த விளையாட்டுத் துறையை கட்டியெழுப்பி, மாணவர்கள் பல வெற்றிகளை அடைய வைத்ததோடு, தேசிய மட்டத்தில் உடற்பயிற்சி அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள வழிசமைத்தார். இவரது காலத்திலே 3A சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவி செல்வி ரி. துஷ்யந்தினி கல்வித் துறை வளர்ச்சியின் ஓர் சுட்டியாக அமைந்துள்ளது.

பாடசாலையின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணியான மாணவர்தொகையில் காத்திரமான பங்காற்றி வரும் 'கிறிஸ்து இல்ல' விடுதியின் நிறுவுனர் என்ற வகையில் அவரது சேவை என்றும் மறக்க முடியாதது. தனது சொந்த முயற்சியால் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து இவ்விடுதியை நிறுவி அதற்குப்

பொருத்தமான கட்டிடங்களையும் கட்டி, பெற்றோரை இழந்த மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பல மாணவர்களை, பிரதிபலன் எதிர்பாராது, உறைவிடமும் கல்வியும் வழங்கி பராமரித்து வந்தார்.

தற்போது எமக்குப் பல வழிகளில் கைகொடுக்கும் வெளிநாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். எமது கல்லூரியின் பௌதீகவள விருத்தியில் கணினிக் கற்கை நிலையம், நூலகம் மற்றும் விஞ்ஞான ஆய்வு கூடம் போன்ற அத்தியாவசிய வளங்கள் அருட்திரு ஜே.ஏ. ஜேசுதாஸ் அவர்களின் துணிச்சலான தீர்மானங்கள் மூலமே சாத்தியானதென்றால் மிகையில்லை. இப்பிரதேசத்தில் அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டு வந்த போதும் ஆயர் அவர்களின் ஆலோசனையின் பெயரில் ஒத்துமாறல் அடிப்படையில் முன்னர் பணியாற்றிய கல்லூரியான இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் 10.02.2010ல் அதிபராக அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். 01.01.2003 முதல் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய நான் அதே தினத்தில் இங்கு அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். 9 வருட கால அதிபர் சேவை உள்ளடங்கலாக 12 வருட சேவையாற்றிய இவரக்கு கல்லூரிச் சமூகம் தனது நன்றியை 18.02.2010ல் சிறப்பாக நடத்திய பிரிவுபசார விழாவில் தெரிவித்துக் கொண்டது.

**மாணவர் விபரம்**

2009ல் கல்லூரியில் மாணவர் தொகை 402 ஆக இருந்தது. இவர்களில் 62 பேர் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மாணவர்களாகும். உயர்தரத்தில் 28 மாணவிகள் கற்றுவருகின்றனர். 2006ல் ஏற்பட்ட யுத்த நிலமைகள் காரணமாக கல்லூரியில் இருந்து சென்ற மாணவர்கள் பலர் மீண்டும் வந்து இணைந்து கொண்டனர்.

**ஆசிரிய ஆளணி**

2009ல் 19 நிரந்தர ஆசிரியர்களும் 17 தற்காலிக இணைப்பு ஆசிரியர்களும் இரண்டு பகுதி நேர ஆசிரியர்களுமாக 40 சேவையாற்றிவந்தனர். இவர்களில் அருள்திரு ஏ.றொபின்சன் ஜோசவ் அவர்களும் ஆசிரியை செல்வி இ.இளையதம்பி அவர்களும் இடமாற்றம் பெற்று எம்முடன் இணைந்து கொண்டனர். தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றி உதவி ஆசிரியர் நியமனம் பெற்ற திரு. கே. சிவ சிறிசாந்திநாயகனும் செல்வி ப. கோபாலப்பிள்ளையும் எமது கல்லூரியில் புதிய நியமனத்தைப் பெறுப்பேற்றுக் கொணடனர். நீண்ட கால விடுப்பில் நின்ற திருமதி. என். செவ்வேளும், கற்கை விடுமுறையில் நின்ற

ஆசிரியர் திரு. பி. டபிள்யு. நவறாஜாவும் மீண்டும் இணைந்து கொண்டனர்.

இதேவேளை எமது நிரந்தர ஆசிரியர்களான அருள்திரு.எம். சோபன் ரூபஸ் மற்றும் திருமதி. க. அகிலன் ஆகியோரும் தற்காலிக இணைப்பு ஆசிரியர்கள் திரு ஏ. ஜெயகணேஸ் மற்றும் கே. தயாபரன் ஆகியோரும் இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.

எமது ஆசிரிய ஆளணியில் 7 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்றவர்களும் 21 பட்டதாரிகளும் 10 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் 2 உதவி ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர்.

**கல்விசாரா ஊழியர்**

எமது கல்லூரியில் பாடசாலைத் தொழிலாளி ஒருவரும் காவலாளி ஒருவரும் ஆய்வு கூட உதவியாளர் ஒருவரும் சேவையாற்றி வருகின்றனர். அலுவலக உதவியாளரோ அல்லது முகாமைத்துவ உதவியாளரோ இல்லாத நிலையிலும் எமது கல்லூரியின் அலுவலக உதவியாளர் திரு. X. M. புறோகியர் தொடர்ந்தும் கோட்டப் பணிமனையிலேயே இணைக்கப்பட்டு அங்கு பணியாற்றிவருகின்றார். இவ்வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை. மேலும் முன்னர் இங்கு பணியாற்றி பின்னர் மாற்றலாகிச் சென்ற பாடசாலைப் பணியாளர் திரு.ஆ. ஜோசவ் பிரிஸ்லி அவர்கள் 12.10.2009ல் தற்காலிகமாக எம்முடன் இணைந்துள்ளார்.

தற்போது அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளராக தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய செல்வி.வி.சித்திரா அவர்கள் வேறு நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். கணினி அறையின் உதவியாளராக செல்வி.ஜோ.தர்சினி அவர்களும் சுகாதார தொழிலாளியாக திரு.வி.ஜெராட் அவர்களும் தொண்டரடிப்படையில் கடமையாற்றி வருகின்றனர்.

பெரும்பாலான ஆசிரியர்கள் தினமும் நீணடதூரம் பிரயாணம் மேற் கொண்டு கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் பல இடர்கள் மத்தியில் அரும்பணியாற்றிவரும் ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் இவ்விடத்தில் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

**கல்வி அபிவிருத்தி**

க.பொ.த சா/த மற்றும் உயர்தர பெறுபேறுகளில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளமையை சிறப்பாக குறிப்பிட முடியும். 2009ல் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றியோரில் 51 வீதமானோர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

உயர்தரப்பரீட்சையில் 2009ல் தோற்றியோரில் 85% வீதமானோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ளதோடு 2A,B சிறந்த பெறுபேறாகவுள்ளது.

கணினி கற்கை நிலையத்தில் (CLC) அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படைக் கணினிப் பயிற்சிகள் நடைபெற்று வருவதோடு, முறைசாரா கல்வித்திட்டத்தின் கீழ் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களிற்கான கணினிப் பயிற்சிகள் வகுப்புகளும் நடைபெற்றுவந்தன. எனினும் இந்நிலையத்தின் தேவைகள் முற்றாக பூர்த்தி செய்யப்படாமை தொடர்ந்தும் ஓர் குறைபாடாகவே உள்ளது. உரிய தளபாடங்களும் குளிரூட்டிகளும் இந்நிலையத்திற்கு இன்னும் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

2006/2008 காலப்பகுதியில் இரண்டு கட்டங்களாகப் பெறப்பட்ட திணைக்கள நிதியுடன் பாடசாலை அபிவிருத்திச்சங்க உதவியுடனும் கட்டிமுடிக்கப்பட்ட நூலகம் பெப்ரவரி மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் ஆர்வத்துடன் இதனைப்பயன்படுத்தி வருகின்றனர். இதற்காக நூல்களை அன்பளிப்புச் செய்ய முன்வருமாறு பழையமாணவர்களையும் நலன் விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்

2009ல் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான கணித பாடத்தில் விசேட செயற்திட்டங்கள் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வந்தன. இச் செயற்திட்டம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியமையை 7% வீத சித்தி உயர்வு காட்டி நிற்கின்றது. இதே போன்று விஞ்ஞான பாடத்திலும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் புதிய விஞ்ஞான ஆய்வு கூடத்தின் உச்சப்பயன்பாடு என்பவற்றினால் 16% அதிகரிப்பும், விஞ்ஞானபாட பெறுபேறுகள் 84% மாக உயர்ந்து தீவக வலயத்தின் முதன்மைநிலையை அடைந்துள்ளது. அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடகமும் அரங்கியலும், சுகாதாரமும் உடற் கல்வியும் ஆகிய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளை பெற்று மாணவர்கள் 100% சித்தி பெற்றளளமையையும் இங்கு குறிப்பிட வேண்டும். அத்துடன் தமிழ், சமயம், ஆகிய பாடங்களுக்குரிய சித்தி வீதமும் உயர்ந்துள்ளது. மேற்படி பாடங்களை கற்பித்த ஆசிரியர்களை இவ்விடத்தில் சிறப்பாக பாராட்டுகின்றேன்.

2009ல் தரம் 5 புலமைப் பரிசிலினை 05 மாணவர்கள் தொடர்ந்து பெற்று வருகின்றனர். உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்படும் சிப்தொர புலமைப் பரிசிலினை 05 மாணவர்கள் பெற்றுவருகின்றனர். சிசு திரி புலமைப் பரிசிலிற்கு விண்ணப்பித்துள்ளபோதும் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

### மதிய உணவு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தரம் 6 - 9 மாணவர்களிற்கு மதிய உணவு வழங்கும் திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பழைய மாணவர் சங்கங்களின் உதவியோடு தரம் 10 - 13 மாணவர்களுக்கும் இத்திட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றோம். வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெரும்பான்மையான மாணவர்கள் உள்ள எமது கல்லூரிக்கு இத்திட்டம் உண்மையிலேயே மிகவும் பயனுள்ள திட்டம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

### மைதான அபிவிருத்தி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் இரண்டு கட்டங்களாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியுதவியின் கீழ் கூடைப்பந்தாட்ட மைதானமானது புனரமைக்கப்பட்டு 18.02.2009 அன்று முன்னை நாள் கிறீஸ்த இல்ல காப்பாளர் திரு ஜேசுதாசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. எமது கல்லூரியின் மைதானத்தை விஸ்தரித்து 400m ஓடுபாதை கொண்ட மைதானமாக்குவதற்கான ஆரம்ப வேலைகள் நிறைவுற்றுள்ள போதும் இதன் பூரண அபிவிருத்திக்காக தொடர்ந்தும் நாம் பலரின் உதவிகளையும் நாடி நிற்கின்றோம்.

### பரிசளிப்பு தினம்

2008ம் ஆண்டிற்கான பரிசளிப்பு தினம் 18.07.2009 அன்று சிறப்பாக நடைபெற்றது. ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவான் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். சிறந்த அடைவு பெற்ற மாணவர்களுக்கு பரிசு வவுச்சர்களும் சான்றிதள்களும் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை *அன்ரோனியன் நிதியத்திலிருந்து* பெற்றுக்கொண்டோம்

### மன்றங்கள்

எமது கல்லூரியில் இயங்கிவரும் உயர்தர மாணவர் மன்றம், கத்தோலிக்க மாணவர் மன்றம், இந்து மாணவர் மன்றம், சாரணியம், சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் போன்றவை தொடர்ந்தும் மாணவர் ஆளுமை விருத்தியிலும் சேவை செய்வதிலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. இவை முறையே உயர்தர மாணவர் ஒன்றுகூடல், ஒளிவிழா, சரஸ்வதி பூசை போன்ற முக்கிய நிகழ்வுகளை உரிய ஆண்டுகளில் சிறப்பாக நடத்தியிருந்தன. எமது சுற்றாடலை சிறந்தமுறையில் பேணவும் மாணவரிடம் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவுமென சுற்றாடல் குழு எமது கல்லூரியில் அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

**விளையாட்டு**

விளையாட்டுத் துறையில் தொடர்ந்தும் நாம் முன்னிலையில் இருந்து செயற்பட்டு வருகின்றோம். 2009ல் வலய மட்டத்தில் எமது கல்லூரி புள்ளி அடிப்படையில் முன்னிலையில் திகழ்ந்தது. பெரு விளையாட்டுக்களில் வலய மட்டத்தில் சிறந்த வெற்றிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் சிறப்பாக பங்குபற்றினோம். எமது உடற்பயிற்சி அணி மாகாண மட்டத்தில் 2ம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

**மெய்வல்லுநர் போட்டிகள்**

2009ம் ஆண்டு மாசி 01ல் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியின் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட செயலக, திட்டமிடல் பணிப்பாளர் திரு. M. பிரதீபன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சேவியர் இல்லம் சம்பியனாகியது.

**பெரு விளையாட்டுக்கள்**

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் கிறிக்கெட் போன்ற விளையாட்டுக்களிலும் எமது அணிகள் சிறப்புடன் விளையாடி வருதோடு மாவட்ட மட்டத்தில் பல இடங்களையும் பெற்றுள்ளன.

**உள்ளக விளையாட்டுக்கள்**

உள்ளக விளையாட்டுக்களில் பட்மின்ரன் மற்றம் செஸ் போன்றவற்றில் இவ்வருடமும் மாவட்ட மட்டத்திற்கு சென்று பங்குபற்ற எமது அணிகள் தகுதி பெற்றிருந்தமையை இங்கு சிறப்பாக குறிப்பிட வேண்டும். இவற்றில் நாம் இன்னும் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

**பழைய மாணவர் சங்கங்கள்**

பல்வேறு நாடுகளில் வசித்துவரும் எமது பழைய மாணவர் சங்கங்கள் எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்து வருகின்றனர். கனடாவில் இயங்கிவரும் பழைய மாணவர் சங்கம் (Kayts St.Antony's College Alumini Association, Canada) வருடாந்தம் நடைபெற்று வரும் பரிசளிப்பு தினத்திற்காக பதக்கங்களையும் கேடயங்களை வழங்கி வருவதோடு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அன்றாட செயற்பாடுகளிற்கான நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றது. இச்சங்க உறுப்பினர்களால் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கை நிதியம் 2009ல் ரூபா

110,000.00 கல்லூரித் தேவைக்காக அன்பளிப்பச் செய்துள்ளது. இன்னும் மேலதிகமான தேவைகளுக்காக அவர்களிடம் விண்ணப்பித்துள்ளோம். இவ்விடத்தில் இந்நிதியத்தை நிறுவியவர்களை நன்றியுடன் நினைவு கூருவதோடு இதனை நிர்வகிக்கும் கொழும்பிலுள்ள பழைய மாணவர்களிற்கும் நன்றி கூறுகின்றோம்.

எமது பிரதம விருந்தினர் அவர்களே! தாங்கள் தலைமை தாங்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்காக லண்டனில் இருந்து இயங்கி வரும் பழைய மாணவர் சங்கம் (St.Antony's College Kayts Alumini Association Europe) 2009ல் நிதி நெருக்கீடுளைச் சந்தித் போதும் வருட பிற்பகுதியிலே அவற்றில் இருந்து மீண்டெழுந்து தங்களது தலைமையிலே இயலுமான அனைத்து உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளமை குறித்து எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்னிலங்கையில் செயற்படும் பழைய மாணவர் சங்கமும் (St.Antony's College, Past Pupils' Association, South Ceylon Branch) அவ்வப்போது இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. சென்ற வருடம் கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு சென்ற போது அன்புடன் உபசரித்து உணவுளைப் பரிமாறி இயன்ற உதவிகளை வழங்கியிருந்தார்கள். அவர்களிற்கும் எமது நன்றிகள்.

ஊர்காவற்றுறையில் இயங்கிவரும் தாய்ச்சங்கமும் (St.Antony's College Old Boys Association) இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. ஆசிரியர்தினம் மற்றும் பரிசளிப்புதினம் போன்றவற்றிற்கு அன்பளிப்புகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றது. கல்லூரி தினத்தில் இவர்கள் எம்மோடு இணைந்து ஒன்றுகூடி இத்தினத்தை சிறப்பிப்பது ஓர் சிறப்பம்சமாகும்

இதைத் தவிர தனிப்பட்ட முறையிலும் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பல உதவிகளை செய்துவருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிந்தனைக்கு**

நவீன தொழிட்நுட்ப விஞ்ஞான உலகின் தொடர் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலும் வலிமையையும் கொண்ட புதிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் பொறுப்பும் கடமையும் தற்போது பாடசாலைகளுக்கு உண்டு. அதேவேளை போருக்கு பின்னைய காலத்தின் விளிம்பில் நிற்கும் நாம் துணிவும் மனத்தைரியமும் உள்ள

புதிய இளைஞர் சமூகத்தைப் படைகின்றவர்களாகவும் இருத்தல் காலத்தின் தட்டிக்கழிக்க முடியாத தேவையாகும். நீண்ட போரின் வடுக்கள் ஓயாத அலையாகத் தாக்கி இளைய சமூகத்தினரின் சிறப்பான சிந்தனைகளையும், உயர்வான திறன்களையும் அழிப்பதற்கு நாம் இடமளிக்க கூடாது. மாறாக புதிய கல்விச் சிந்தனைகள், புதிய கலைத்திட்ட மாற்றங்கள் ஆகியவற்றை நன்கு உள்வாங்கி, விரைவாக மாறிக்கொண்டிருக்கும் உலகில், எமது பிள்ளைகள் நிலையானதோர் இடத்தினைப் பெற்றுக்கொள்ள, கிடைக்கின்ற சகல வளங்களையும் நன்கு பயன்படுத்திக் கொள்வதுடன், சலைக்காது கடின முயற்சி செய்வதுடன், உயர் விழுமியங்களைப் போற்றிப் பேணுகின்றவர்களாக இருப்பது, எமது எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய துணைபுரியும். எனவே நாம் எமது கல்விச் செயற் திட்டங்களில் ஒருமித்த கருத்தை கொண்டவர்களாக இருப்பதுடன், ஒன்றிணைந்த செயற்பாடுகளையும், புரிந்துணர்வுகளையும், அர்ப்பணிப்பையும், பிறரன்பையும் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

**நன்றிகள்**

மாணவர் கல்வியிலும் கல்லூரி வளங்களிலும் பல முன்னேற்றங்களிற்கு உந்து சக்தியாகவிருந்து செயற்பட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்சியடைகின்றேன். சிறப்பாக எமது தேவைகள் பலவற்றை அக்கறையோடு நிறைவேற்றுவதோடு எப்போதும் எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துவருகின்ற தீவக வலயத்தின் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. R.V இராதாகிருஸ்ணன் அவர்களுக்கும், எமக்கு அருகே இருந்து எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் தொடர்ந்து ஆதரவளித்துவரும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் மதிப்பார்ந்த திரு. S. பாஸ்கரன் அவர்கட்கும், எமது கல்வி அடைவு அபிவிருத்திற்கு பல உதவிகளையும் புரிந்துவரும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூறுகின்றேன். அத்தோடு இன்றையதினம் இங்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் பழைய மாணவர் சங்க ஐரோப்பிய யூனியன் கிளையின் தலைவர் மதிப்பார்ந்த, திரு. ம. ஜோசவ் மனோகரன் அவர்கட்கும் ஏனைய விருந்தினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி இவ்வறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

வணக்கம்.

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர்,
அதிபர்

13.07.2010

பரிசுகள் பெறும் மாணவர்கள் விபரம்

ஒவ்வொரு தரத்திலும் பாடரீதியாக பரிசு பெறும் மாணவர்கள்.

| தரம் 6 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | ஸ்ரீ. டினோசன் | அ.சால்ஸ்டிறோஷன் | தே. அன்ரனி அன்றூ |
| கணிதம் | ஸ்ரீ. டினோசன் | அ.சால்ஸ்டிறோஷன் | தே. அன்ரனி அன்றூ |
| ஆங்கிலம் | ஸ்ரீ. டினோசன் | அ.சால்ஸ்டிறோஷன் | தே. அன்ரனி அன்றூ |
| விஞ்ஞானம் | அ.சால்ஸ்டிறோஷன் | ஸ்ரீ. டினோசன் | சி. துவாரகன் |
| வரலாறு | ஸ்ரீ. டினோசன் | அ.சால்ஸ்டிறோஷன் | ஜெ. ஜோசப்பிரதீபன் |
| குடியுரிமை | ஸ்ரீ. டினோசன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | கி.கிளின்ரன்பெனான்டோ<br>தே. அன்ரனிஅன்றூ |
| புவியியல் | ஸ்ரீ. டினோசன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | அ. சால்ஸ்டிறோஷன் |
| சித்திரம் | சி. துவாரகன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | அ.அலெக்ஸ்டினோஜன் |
| சங்கீதம் | அ.சால்ஸ்டிறோஷன | தே.அன்ரனி அன்றூ | த. பவிதாஸ் |
| நாடகம் | ஸ்ரீ. டினோசன் | ய. ஜென்சன் | யே. கிஷாந்தன் |
| நடனம் | கி.கிளின்ரன் பெனான்டோ | ம. கௌசிகன் | - |
| றோ.கத்தோ. | அ.சால்ஸ்டிறோஷன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | தே. அன்ரனி அன்றூ |
| இந்துசமயம் | ஸ்ரீ. டினோசன் | சி. துவாரகன் | நி. போல்லக்ஸ்மன் |
| சுகாதாரம் | அ.சால்ஸ்டிறோஷன் | ஸ்ரீ. டினோசன் | தே. அன்ரனி அன்றூ |

| தரம் 7 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | சி.மேவின்யூட் | ஜெ. றஜீவன் | சு. நாகசுரேன் |
| கணிதம் | ஜெ. றஜீவன் | சு. நாகசுரேன் | C.W. நிக்ஷன் |
| ஆங்கிலம் | சி.மேவின்யூட் | ஜெ.றஜீவன் | உ. கௌதமன் |
| விஞ்ஞானம் | ஜெ. றஜீவன் | சு. நாகசுரேன் | S நாகமதுஷன் |
| வரலாறு | ஜெ. றஜீவன் | சு. நாகசுரேன் | உ. கௌதமன் |
| குடியுரிமை | ஜெ. றஜீவன் | S.நாகமதுஷன் | S மேவின்யூட் |
| புவியியல் | ஜெ. றஜீவன் | சு. நாகசுரேன் | S. நாகமதுஷன் |
| சித்திரம் | அ. சறோன் | C.W நிக்ஷன் | J. நிறோஜன் |
| சங்கீதம் | உ.கௌதமன் | சி.மேவின்யூட் | கி.கெதோடியஸ்மோவின் |
| நாடகம் | ஜெ. றஜீவன் | S. நாகமதுஷன் | ஜெ. ஜேசுதன் |

| | | | |
|---|---|---|---|
| றோ.கத்தோ. | ஜெ. றஜீவன் | ஜெ. ஜேசுதன் | C.W நிக்ஷன் |
| இந்துசமயம் | சு. நாகசுரேன் | S. நாகமதுஷன் | உ. கௌதமன் |
| சுகாதாரம் | ஜெ. றஜீவன் | C.W. நிக்ஷன் | சி.மேவின்யூட் |

| தரம் 8 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | சி.கெயின்ஸ் | அ.சாள்ஸ் டிலக்சன் | சி. பிரசாத் |
| கணிதம் | அ.சாள்ஸ் டிலக்சன் | ச.சதீஸ்குமார் | சி.கெயின்ஸ் |
| ஆங்கிலம் | அ.சாள்ஸ்டிலக்சன் | சி.கெயின்ஸ் | கு.தனுராஜ் |
| விஞ்ஞானம் | ச.சதீஸ்குமார் | அ.சாள்ஸ்டிலக்சன் | சி.கெயின்ஸ் நெ.ரனிஸ்லாஸ் |
| வரலாறு | சி.கபிலன் | அ.சாள்ஸ்டிலக்சன் | ச.சதீஸ்குமார் |
| குடியுரிமை | சி.கெயின்ஸ் | ச.சதீஸ்குமார் | அ.சாள்ஸ்டிலக்சன் |
| புவியியல் | சி.கபிலன் | ச.சதீஸ்குமார் | கு.தனுராஜ் |
| சித்திரம் | ச.சதீஸ்குமார் | சி.கெயின்ஸ் சி.கபிலன் | |
| சங்கீதம் | கு.தனுராஜ் | கு. லதீபன் | அ.சாள்ஸ்டிலக்சன் |
| நடனம் | அ.அசிஸ்குமார் | A.P.D அருண் | |
| றோ.கத்தோ. | அ.சாள்ஸ்டிலக்சன் | ச.சதீஸ்குமார் | சி.கெயின்ஸ் |
| இந்துசமயம் | சி. பிரசாத் | கு.தனுராஜ் | கு. லதீபன் |
| சுகாதாரம் | ச.சதீஸ்குமார் | சி.கபிலன் | டெ. பிரசாத் |

| தரம் 9 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | சு.நாகசுதன் | சி.வசந்தராஜ் | அ.டன்ஸ்ரன் |
| கணிதம் | சு.நாகசுதன் | எம்.சுஜீபன் | யே.நோபேட் |
| ஆங்கிலம் | அ.டன்ஸ்ரன் | சு.நாகசுதன் | யே.நோபேட் |
| விஞ்ஞானம் | சு.நாகசுதன் | சி.வசந்தராஜ் | அ.டன்ஸ்ரன் |
| வரலாறு | யே.சசிராஜன் | யே.நோபேட் | சு.நாகசுதன் |
| குடியியல் | சி.வசந்தராஜ் | எம்.சுஜீபன் | சு.நாகசுதன் |
| புவியியல் | யே.சசிராஜன் | எம்.சுஜீபன் | அ.டன்ஸ்ரன் |
| சித்திரம் | எம்.சுஜீபன் | யே.சசிராஜன் | எ.மெல்வினஸ் |
| சங்கீதம் | சு.நாகசுதன் | யே.நோபேட் | அ.டன்ஸ்ரன் |
| றோ.கத்தோ. | சி.வசந்தராஜ் | அ.டன்ஸ்ரன் | யே.நோபேட் |
| இந்துசமயம் | சு.நாகசுதன் | எம்.சுஜீபன் | ஏ.அபிகரன் |
| சுகாதாரம் | யே.நோபேட் | சி.வசந்தராஜ் | அ.டன்ஸ்ரன் |

| தரம் 10 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | ம. கெயின்சன் | செ.அருள்றாஜ் | A. அல்பிரட் யூட்ஷன் |
| கணிதம் | சு.றொக்ஷன் | ம.ஆனல்ட்சரண்ஷன் | ம. கெயின்சன் |
| ஆங்கிலம் | ம.ஆனல்ட்சரண்ஷன் | ம. கெயின்சன் | செ.அருள்றாஜ் |
| விஞ்ஞானம் | செ.அருள்றாஜ் | ம. கெயின்சன் | சு.றொக்ஷன் |
| வரலாறு | ம. மரியறூபன் | செ.அருள்றாஜ் | ம.ஆனல்ட்சரண்ஷன் |
| றோ.கத்தோ. | செ.அருள்றாஜ் | ம.டினோசன் | ம.மரியறூபன் |
| இந்துசமயம் | சி.கஜானன் | S. நகுந்தன் | க.விஜேந்திரன் |
| புவியியல் | ம.மரியறூபன் | ம.ஆனல்ட்சரண்ஷன் | நிஜிஸ்ரன் |
| முயற்சியாண்மை | செ.அருள்றாஜ் | A.அல்பிரட்யூட்ஷன் | ம. கெயின்சன் |
| சித்திரம் | ம. டினோசன் | சு.றொக்ஷன் | ம.ஆனல்ட்சரண்ஷன் |
| சங்கீதம் | ம. மரியறூபன் | யோகநேசன் | S. நகுந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | செ.அருள்றாஜ் | ம. கெயின்சன் | S.ஜெனிஸ்ரன் |
| கடல்வளம் | ம.மரியறூபன் | N.நிஜிஸ்ரன் | S.ஜெனிஸ்ரன் |
| சுகாதாரம் | செ.அருள்றாஜ் | ம. கெயின்சன் | குணச்செல்வன் |
| ICT | யே.ராஜ்றொசின்ரன் | சு.றொக்ஷன் | ம.டினோசன் |

க.பொ.த (சா/த) பரீட்சையில் A தர சித்தி பெற்ற மாணவரின் பாடரீதியான விபரம்.

| | |
|---|---|
| தமிழ் | A. அல்பிரட் நியூட்டன், A. அன்ரன்கஜீஸ்காந், N. ராஜன் |
| கணிதம் | A. அல்பிரட் நியூட்டன் |
| விஞ்ஞானம் | A. அல்பிரட் நியூட்டன் |
| வரலாறு | A. அன்ரன் கஜீஸ்காந் |
| இந்துசமயம் | N. ராஜன், S. நிதர்ஷன், K. நிதர்ஷன் S. விதுஷன் E. வினோத் N. கஜன்ராஜ் T. தர்ஷிகன் |
| றோ.கத்தோ. | A.அல்பிரட் நியூட்டன், A. அன்ரன்கஜீஸ்காந், M. நில்கிளின்ரன் B. சென்தியொன்ஷன் |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | N. ராஜன், S. நிதர்ஷன், K. நிதர்ஷன் S. விதுஷன் R. அனுஜன் P.இனோச் |
| கடற்றொழிலும் உணவுதொழில்நுட்பமும் | A, அல்பிரட் நியூட்டன் |
| நாடமும் அரங்கியலும் | A, அல்பிரட் நியூட்டன் E. வினோத் |
| சங்கீதம் | N. ராஜன் |

| தரம் - 12 - 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3 ம் பரிசு |
|---|---|---|---|
| வர்த்தகம் | | | |
| கணக்கீடு | | | |
| பொருளியல் | A.அருள்பவில்ராஜ் | B. தர்சிகா | V. கிருஷாந்தி |
| தமிழ் | A.அருள்பவில்ராஜ் | B. தர்சிகா | E. சுபாசினி |
| அளவையியல் | G. பகீரதன் | | |
| இந்துநாகரீகம் | E. சுபாசினி | S. சந்திரவதனா | P.மதிதரன் |
| கிறீஸ்தவ நாகரிகம் | B. தர்சிகா | A.அருள்பவில்ராஜ் | V. கிருஷாந்தி |
| நாடகமும் அரங்கியலும் | G. பகீரதன் ,V. பற்றிக்டிலான் | | J. தர்சன் |
| அரசியல் | E. சுபாசினி | S. சந்திரவதனா | |
| சித்திரம் | A. டொமின்கோ | | |

| தரம் 13 2009 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| வர்த்தகம் | ம.மரீன் தர்மிகா | யே.அன்ரன் கஜன் | - |
| கணக்கீடு | ம.மரீன் தர்மிகா | - | |
| பொருளியல் | ம.மரீன் தர்மிகா | வ.நிரோஜினி | |
| தமிழ் | எ.லக்ஸ்மன் | ம.மேரி டிஷானி | யூ.விஜிதா |
| அளவையியல் | M. மகின்சியா | M.அபினதாப் றொஜிஸ்ரன் | S. நிவேதினி |
| இந்துநாகரீகம் | ம.பத்மராசா | வ.நிரோஜினி | K. விக்னேஸ்வரன் |
| கிறீஸ்தவம் | யூ.விஜிதா, | எ.லக்ஸ்மன் | நீ.அனிஸ்ரன் |
| நாடகமும் அரங்கியலும் | கே.தீபரூபன் | கே. கிருஷாந் | செ.செல்வநிரோஜன் |
| அரசியல் | எ.லக்ஸ்மன் | நீ.அனிஸ்ரன் | யூ.விஜிதா |
| சங்கீதம் | ம.மேரி டிஷானி | | |

க.பொ.த (உ/த) 2009 பரீட்சையில் A தர சித்தி பெற்ற மாணவரின் பாடரீதியான விபரம்.

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| அளவையியல் | J. பிருந்தா |
| கிறிஸ்தவம் | J. பிருந்தா S. கிறிஸ்தபெலீனா R. அனோஜன் B. டினேஷ் K. ஜெபநேசன் T. டினேஸ் S. பிரதீஸ் A. றெனாலட்லக்ஷின் A. றொக்ஷன் பிரதீப் |

## வகுப்பு ரீதியாக பொதுத் தகமைக்குரிய பரிசு பெறும் மாணவர்

| தரம் | பெயர் |
|---|---|
| 6 | ஸ்ரீ. டினோஷன் |
| 7 | ஜீ. ரஜீவன் |
| 8 | அ.சாள்ஸ் டிலக்ஸன் |
| 9 | R. நாகசுதன் |
| 10 | ம. கெயின்ஸன் |
| 12 Arts | E. சுபாசினி |
| 12 Com. | ---- |
| 13 Arts | எ. லக்ஸ்மன் |
| 13C | ம. மரீன் தர்மிகா |

## 2009 ல் புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ள புதிதாக இணைந்து கொண்டமைக்காக பரிசு பெறும் மாணவர்கள்

| பெயர் | தரம் | புலமைப்பரிசில் |
|---|---|---|
| J. வெரொனிக்கா | | சிப்தொரா |
| M. மயூரி | | சிப்தொரா |
| J. அனிற்றா மியூரி | | சிப்தொரா |
| A. யூட்பிறைன்ஷன் | | சிப்தொரா |
| A.அருள்பவில்ராஜ் | | சிப்தொரா |

## சிறந்த பொதுப்பரீட்சை பெறுபேற்றிற்காக பரிசு பெறும் மாணவர்கள்.

| பரீட்சை | மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| க.பொ.த (சா/த) | A, அல்பிரட் நியூட்டன் | 6A 2B C |
| க.பொ.த (உ/த) | பிருந்தா. ஜேசுதாசன் | 2A B |
| க.பொ.த (உ/த) | S. வினோத்ராஜ் | 2B C |

## சிறந்த மெய்வல்லுனர் பரிசு பெறும் மாணவர்கள்

| வயது | 2009 |
|---|---|
| 13 க்கு கீழ் | G. ராஜ்குமார், கி.வி.நிக்சன் |
| 15 க்கு கீழ் | A. அன்ரனி அலைக்ஸ் |
| 17 க்கு கீழ் | து. தனுஷன் S. லஸ்ரின் B. சிவதிபன் |
| 19 க்கு கீழ் | ஏ. டொமின்கோ |
| 21 க்கு கீழ் | M. தினேஸ், B. ஆல்தோ |
| பெண்கள் | J. விஜிதா |

## துறைசார் திறமைக்காக பரிசுபெறும் மாணவர்கள்

| விடயம் | 2009 |
|---|---|
| உதைபந்தாட்டம் | ஏ.டொமின்கோ |
| கரப்பந்தாட்டம் | க.விக்னேஸ்வரன் |
| கிரிக்கட் | க.விக்னேஸ்வரன் |
| பட்மின்ரன் | செ.அருள்ராஜ் |
| உடற்பயிற்சி | நு. வினோத் |
| சகல துறை | ஆ.தினேஷ் |
| சாரணியம் | யு. அல்பிரட் யூட்ஷன் |
| சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் | மு. கிரஷாந் |

## சிறந்த நூலகப் பயன்பாட்டிற்காக பரிசுபெறும் மாணவர்கள்

| பிரிவு | 2009 |
|---|---|
| கீழ்ப்பிரிவு | N. ராஜன் |
| மேல்ப்பிரிவு | S. சந்திரவதனா |

## 2009ம் ஆண்டில் கல்லூரியின் சிறந்த மாணவன்

## Antonian of the year 2009

## செல்வன் அ.பபில்ராஜ்

## 2009 ம் ஆண்டின் கல்லூரியின் சிறந்த ஆசிரியர்

## Staff of the year 2009

## செல்வி கந்தலீலா நடராஜா

| Year | Antonian of the Year | Staff of the Year |
|---|---|---|
| 2002 | Mas.A.Anistan Jeyakumar | Mr.P.W.Navarajah |
| 2003 | Mas.J.J.Kirisenthira | Mr.S.Sathananthan |
| 2004 | Mas.R.Anosanth | Mrs.C.P.S.W.Navarajah |
| 2005 | Mas.K.Puvi | Mrs.P.Theva |
| 2006 | Mas.G.A.Lintan Jathees | Mr.K.Kiomar |
| 2007 | Mas.E.G.Luxman | Miss.A.Arulanantham |
| 2008 | Mas.N.Kishanraj | Mr.S.Jasotharan |
| 2009 | Mas.A.Babilraj | Miss.N.Nadarajah |

# விளையாட்டு முடிவுகள் 2009

## தேசிய மட்டத்தில் 3 ம் இடத்தைப்பெற்ற உடற்பயிற்சி அணி விபரம்

| பெயர் | பெயர் |
|---|---|
| 1. இ.வினோத் | 16. கி. குளோடியஸ்டாவின் |
| 2. அ. பிறின்ஸ்இனோச் | 17. க. விக்கினேஸ்வரன் |
| 3. எ. எமில்சன் | 18. ம. பத்மராஜா |
| 4. ம.மயூரன் | 19. ற. றஜிதரன் |
| 5. தொ. தமிழ்றாஜ் | 20. றொ. அனுஜன் |
| 6. அ.அருள் பவில்ராஜ் | 21. யோ.பிரதீபன |
| 7. சி.டரன்ஸ் அன்ரனி | 22. ப.சிவதீபன் |
| 8. கு. நிதர்ஷன் | 23. கா. கோகுலன் |
| 9. ஜே. ஹரிப்பிரதாஸ் | 24. அ. டொமின்கோ |
| 10. ம. கிருஷரந்தன் | 25. அ. கஜீபன் |
| 11. அ. சிபிகரன் | 26. ம. ஆனல்ட் சரண்ஷன் |
| 12. உ. சஞ்சீபராஜ் | 27. ஜீ. பகீரதன் |
| 13. சி. லஸ்ரின் | 28. கு. மேகலரூபன் |
| 14. அ. அலெஸ் | 29 பே. மதிதரன் |
| 15. இ. அமலதாஸ் | 30. ஸ்ரீ. றெமில்டன் |

## பெரு விளையாட்டுக்கள் 2009

**கோ-** கோட்ட மட்டம் **வ-** வலயமட்டம் **தே-**தேசிய மட்டம்

| பிரிவு பெயர் | உதைபந்து | கரப்பந்து | கிரிக்கெட் | பட்மின்ரன் | உடற்பயிற்சி | சதுரங்கம் | மெய்வல்லுனர் |
|---|---|---|---|---|---|---|---|
| 15 வயது | கோ-1<br>வ-1 | கோ-1<br>வ- 3 | | | | கோ– 2 | வலயமட்ட முடிவு<br>1ம் இடங்கள் - 22<br>2ம் இடங்கள் - 24<br>3ம் இடங்கள் - 12<br><br>பெற்ற மொத்தப் புள்ளிகள்<br>194 |
| 17 வயது | கோ-1<br>வ-1<br>மா- 3 | கோ-1<br>வ- 1 | | | | | |
| 19 வயது | கோ-1<br>வ-1 | கே-1<br>வ- 1 | கோ-2<br>வ- 3 | வ-1 | வ- 1<br>மாவ- 1<br>மாகா-2<br>தே- 3 | கோ– 3 | |
| 21 வயது | | | | | | | மா.தினேஷ்<br>மாகா 1500M 1st<br>800M 1st<br>மாகா5000 M 3 rd<br>மா.தினேஷ், அ.சுலக்ஸன், பே.ஆல்தோ, தே.யூலி டெனிஸ், கி.ஜெபநேசன்<br>மாகா –<br>4x 400m -1 st |

**மாவ-** மாவட்டமட்டம் **மா-** மாகாணமட்டம்

## English Day 2009

| Division/Name | Recitation | Copy Writing | Creative Writing | Dictation | Oratory | Reading |
|---|---|---|---|---|---|---|
| Grade 7 T.Antony Anrow | | | | | | Div-2 |
| **Division/Name** | **Recitation** | **Copy Writing** | **Creative Writing** | **Dictation** | **Oratory** | **Reading** |
| Grade 8 S.Keins N.Stanislos | Div-2, Z-1 | Div2, Z-3 | | | | |
| Grade 9 A.Dunston | Div-3 | | | | | |
| Grade 10 S.Arulraj | Div-1, Z-1 | | | | | |
| Grade11 E.Vinoth | Div-1, Z-1 | | | | | |
| Grade 12 V.R.Chrishanthy J.Veronica | | Div-1, Z-1 | Div-1, Z-1 | | | |
| Grade 13 M.Mary Dishany M.Marin Tharmica C.Clodius Davin | | Div-1, Z-1 Div-3 | | | | |
| Grade 6-9 Junior Boys | Group Singing Div-1, Z-1 | | | | | |

| | |
|---|---|
| Grade 10-11 Junior Boys | Group Singing Div-1, Z-1 |
| Grade 12-13 Senior Girls | Group Singing Div-1, Z-3 |
| Grade 10-13 Senior | Drama (Dialouge) Div-1, Z-1 |

Div- Divisional Level , Z - Zonal ,

## தமிழ்த்தினப் போட்டி 2008

| நிகழ்ச்சி | பெயர் | பிரிவு | கோட்டமட்டம் | வலயமட்டம் |
|---|---|---|---|---|
| பேச்சு | அ.சாள்ஸ் டிலக்சன் | 02 | 1 | 02 |
| | அ.அல்பிரட்நியூட்டன் | 04 | 03 | 01 |
| பாவோதல் | ஜீ. றஜீவன் | 02 | 03 | 03 |
| | சு. நாகசுதன் | 03 | 02 | - |
| | செ. அருள்ராஜ் | 04 | 01 | - |
| | வி. றொ. கிருஷாந்தி | 05 | 01 | - |
| தனிஇசை | நெ.ஸ்ரனிஸ்லொஸ் | 02 | | 03 |
| | ம.கெயின்சன் | 04 | 01 | 03 |
| | சி. நிவேதினி | 05 | | 03 |
| குறுநாடக ஆக்கம் | எ.ஞா.லக்ஸ்மன் | 05 | | |
| வில்லுப்பாட்டு | யோ. ஜெனியான்ஷன்<br>நீ. அனிஸ்ரன்<br>எ.ஞா.லக்ஸ்மன்<br>சூ. நிறோஜன்<br>கி.குளோடியஸடாவின் | திறந்த | 01 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தே.தேவதனுசன்<br>ம. ஆனல்ட் சரண்சன் | | | |
| நாடகம் | ம. கெயின்ஸன்<br>யே. யோகணேஷன்<br>செ. அருள்ராஜ்<br>ஜெ.ஜெசிந்தன்<br>நீ. நிஜிஸ்ரன்<br>அ. யூட்ஷன்<br>யோ. றொஸின்ரன்<br>ஜெனிஸ்ரன்<br>அன்ரன்கஜன்<br>தேவதர்சன்<br>நகுந்தன்<br>விஜேந்திரன் | திறந்த | 0 | 02 |
| குழு இசை 2 | ம.டிஷானி<br>யே.நிவேதினி<br>வ.நிறோஜினி<br>யூ.விஜிதா<br>ம.மகின்சியா<br>ம.தர்மிகா<br>மோகனாங்கி<br>தபோஜினி<br>சந்திரவதனா<br>சாளினி | திறந்த | 2 | - |
| நாட்டுக் கூத்து | ஸ்வினோத்ராஜ்<br>அ.சுலைக்ஸன்<br>தே.யூலிடெனிஸ்<br>யே.அன்ரன் கஜன்<br>யே.அன்ரன் கஜீஸ்காந்<br>ம.தோமஸ் தீபன்<br>செ.நிதர்சன்<br>லூ.யோசப் தனுசன்<br>அ.அன்ரோ யோசப்பின்<br>யூ. விஜிதா<br>எ.ஞா.லக்ஸ்மன் | 1 | 1 | 2 |

## வலய மட்ட விஞ்ஞான வினாடி வினா போட்டி 2007

| பெயர் | தரம் | பெயர் | தரம் |
|---|---|---|---|
| எஸ் டினோசன் | 6 | சு.நாகசுதன் | 9 |
| எஸ்.துவாரகன் | 6 | எஸ.வசந்தராஜ் | 9 |
| என்.போல் லக்ஸ'மன் | 6 | ஜெ.நோபேட் | 9 |
| சு.நாகசுரேன் | 7 | செ.அருள்ராஜ் | 10 |
| யு.கெளதமன் | 7 | எம்.மரியரூபன் | 10 |
| ஜெ.ரஜீவன் | 7 | எம் கெயின்சன் | 10 |
| அ.சாள்ஸ் டிலக்ஸன் | 8 | அ.அல்பிரட் நியூட்டன் | 11 |
| ச.சதீஸ்குமார் | 8 | என.ராஜன் | 11 |
| கே.லதீபன் | 8 | அ.அன்ரன் கஜீஸ்காந் | 11 |

| STAFF 2009 | | | | |
|---|---|---|---|---|
| | Name | Educational | Professional | Date of Leaving |
| 01 | Rev.Fr.J.A.Jesuthas | BA, BTh | PGDE, MA | 09.02.2009 |
| 02 | Rev.Fr.K.James Singarayar | BA, BTh | PGDE,M Ed | |
| 03 | Mr.P.W.Navarajah | BA | Spl.Trd(Eng) | |
| 04 | Mrs.C.P.S.W.Navarajah | B.Sc | PGDE | |
| 05 | Mrs.F.J.Collins | | Dip-in-Music | |
| 06 | Rev.Fr.Shoban Rufus | BTh,BPh | | 16.02.2009 |
| 07 | Miss.K.Sengani | | Dip-in- Teach (English) | 30.04.2009 |
| 08 | Mr.S.Jasotharan | | Dip-in-Fisherish | |
| 09 | Miss.K.Nadarajah | BA | | |
| 10 | Miss.A.Arulanantham | BA | | |
| 11 | Miss.P.Sathasivasharma | BCom(Hon) | | |
| 12 | Mrs.S.Thirumaran | BBA | | |
| 13 | Mrs.S.Nanthakumar | BBA(Hon) | | |
| 14 | Mr.K.Kiomar | | Dip-in-Teaching(Tamil) | |
| 15 | Mr.V.Ameeilton | BA | PGDE | 31.12.2009 |
| 16 | Mr.T.Robeshan | BCom, | | 31.12.2009 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | HNDM | | |
| 17 | Miss.M.Vairamuthu | B Sc | | 31.12.2009 |
| 18 | Miss.A.Ariyanayagam | | Dip-in-Teach (Drama) | |
| 19 | Mr.K.Sasikumar | | Spl.Trd (Physical Edn.) | |
| 20 | Mr.S.Thiruchenthuran | | Spl. Trd (Dance) | |
| 21 | Mr.A.Theepan Thilisan | BFA | (Art) | 31.12.2009 |
| 22 | Mr.A.Jeyaganesh | B.Sc | | 04.05.2009 |
| 23 | Mr.K.Chanthirakumar | | Dip-in-Teach (Maths) | |
| 24 | Mr.T.Jasotharan | B.Sc | (ICT) | |
| 25 | Mr.M.Satheeskumar | BA | | 31.12.2009 |
| 26 | Mr.S.Sasitharan | | Dip-in-Teach (Maths) | 31.12.2009 |
| 27 | Mr.K.Sriskantharaja | | HNDA | 31.12.2009 |
| 28 | Mr.K.Thayaparan | BA | PGDE | 06.02.2009 |
| 29 | Mrs.M.Kamalraj | BA | | |
| 30 | Mrs.P.Amuthasingam | B.Com | | |
| 31 | Mr.L.I Rohan | B.Sc | PGDE | |
| 32 | Mr.J.J.Hubert | BA | | 31.12.2009 |
| 33 | Mr.S.Romesh | BA | | 31.12.2009 |
| 34 | Mrs.N.Sevvel | BA | | |
| 35 | Rev.Fr.A.Robinson Joseph | BA, BTh | PGDE(TESL) | |
| 36 | Mr.P.Ketheeswaran | BA | | |
| 37 | Miss.I.Elayathamby | | Spl.Trd(Eng) | |
| 38 | Mr.K.Tharmapalan | BA | | 31.12.2009 |
| 39 | Mr.K.Sivasrisanthinayagan | BA | | |
| 40 | Miss.P.Gopalapillai | G.C.E(A/L) | | |
| 41 | Mr.K.Mathiyalakan | | Lab Attendant | |
| 42 | Mr.J.Rajkumar | | Watcher | |
| 43 | Mr.S.Sebastiampillai | | School Labourer | |
| 44 | Mr.X.M.Brohier | | KKS | |
| 45 | Mr.A.Joseph Priestly | | School Labourer | |

## தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பிலுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

## *COLLEGE ANTHEM*

Let's sing this tuneful Anthem hearty
Sing it loud with heart sincere.
True to Christ, our School and country,
Onwards we shall march secure.

***Chorus***

*Give the utmost for the highest,*
*Let that always be our aim.*
*Strive to gain from life the fullest,*
*For that's real fame.*

Rally round the Alma Mater,
Loyal, honest, faithful and kind,
Men of truth and men of honour,
Strong in body, sprit and mind.

***Chorus***

*Give the utmost for the highest,*
*Let that always be our aim.*
*Strive to gain from life the fullest,*
*For that's real fame.*